# ஆதி மார்க்க னீதி மொழி

November 2023

இதழ் 28 – நவம்பர் மாதம் 2023 வெளியீடு
© AMNA Trust, Chennai



## மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்நோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் நோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே, எதார்த்த நன் மன சற்சன மக்களே, பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஆசீர்பாதத்துடன் ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்சிகை 28ஆம் இதழாக மலர்ந்துள்ளது. மலர்ந்ததின் அடையாளம் இதன் மாறாத மெய்ம்மணமே.

திருக்குரான், பைபிள் இவற்றிலிருக்கும் பஞ்ஞாட்சரத்தின் சிறப்புகள் எல்லாம் பேசக் கூடியதாக இந்த மெய்ம்மணமானது கமழ்ந்து கொண்டிருக்கிறது. உலகத்தின் நகல் சடங்குகளாக சொல்லப் பெறும் ஆயுத பூஜையின் சிறப்புகளும் மிக விரிவாக இதில் விளக்கப் பெற்றுள்ளது. ஒன்பது இரவுகளான நவராத்திரி மற்றும் பத்தாம் நாள் விஜயதசமியின் சிறப்பும், இவற்றின் அம்சமான கல்வி, செல்வம், வீரம் யாவும் இங்கு கூறப் பெற்றிருந்தாலும், வீரம் மிகுந்த வெற்றித் தமிழில் இந்த மெய்ஞானம் எங்கணம் போதிக்கப் பெற்றுள்ளது என்பதை சாலைத் தமிழ் மூலமாக சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

மேலும் வாத கற்பம், நாதமருந்து இவற்றின் சிறப்பை பார்த்து பயன் பெற்றிடவும், பாரமார்த்தீக ஆன்மிக அனுபவங்களைப் பெறவேண்டும் என்பதற்காகவும், நன்மக்களின் அயராத உழைப்பின் மூலம் இந்த சஞ்ஞிகையானது தொகுத்து வழங்கப் பெறுகிறது. மக்களிடத்தில் இந்த மெய் ஞானமானது சேர்ந்து அறிவுத் தெளிவை உண்டாக்கவே இதற்கான இத்தனை உழைப்பும், நோக்கமும். இறைவன் ஒருவனே என்றாலும் பல நிலைகளில் இந்நாதமருந்தின் அத்தியா அவசியத்தை உணர்த்தும் ஆதி மார்க்க னீதி அவையின் நிகழ்வுகள் யாவும் ஒவ்வொரு மாதமும் தொகுத்து வழங்கப்பெறுகிறது. இதனை யாருக்கோ எவருக்கோ எங்கோ எப்போதோ சொன்னது என எண்ணாமல், நம் ஜீவனுக்காகவும், அறிவுத் தெளிவிற்காகவும் சொல்லப்பெற்ற ஒன்று என என் மக்கள் உணர்ந்து அறிந்து இந்த நற்பயனை அடைய வேண்டும் என்பதே என் நோக்கம். பரிசுத்த ஆவி தெய்வம் பரம்பொருள் பிரம்ம பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்தால் என் மக்கள் இதனை உணர்ந்து அறிந்து இதன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறார்கள் என்பது திண்ணம்.

நமஸ்காரம்.

சாலை ரவி

நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை



Copyright © AMNA Trust, Chennai

*யுக யுகந்நோறும் வருவேன் என்று கூறிவிட்டுச் சென்ற கிருஷ்ண பரமாத்மா, இப்போது இப் பூமியில் வந்து பிறந்நிருந்நால் உனக்கு அவரை அடையாளம் தெரியாது. ஆனால், னாம் அடையாளம் சொல்லுகிறோம். அன்று அர்சுனருக்கு அவர் செய்த உபதேசம் - விஸ்வரூபக் காட்சி - எந்நச் சன்னிதியில் னிகழ்கிறதோ அவரே கிருஷ்ண பரமாத்மா. செயல்தான் அடையாளம். உடல் அடையாளம் அல்ல.*

*மனிதனுக்கு உன்னத அறிவு தந்நது எதற்கு? எல்லோரும் ஓர் குலம் என்பதை அறியவே. இந்ந எண்ணம் ஒருவனுக்கு வந்து விட்டால் கயிலாய வீடுதான் அவன் அடையும் முடிவு. இந்நச் செயலைச் செய்யவே சாலை வந்நது, னாமும் வந்நோம்.*

*~ சாலை ஆண்டவர்கள்*


Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2023 அக்டோபர் மாத அவை நிகழ்வுகள் – 2023 நவம்பர் மாத வெளியீடு

**01-10-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி அவை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமாபதி வெங்கட்**

*ஜீவசகோதரர் கௌதம்:* அவரவரின் உலக தேவைக்கான நோக்கம் யாவும் பொய்யாகவே உள்ளது. மெய்யறிவைப் பெறுவது, பிறவிப் பிணியில் இருந்து விடுபடுவது, எண்ணங்கள் மேல் நோக்கமான சிபத்தாக மாறுவது எனும் இவற்றிற்கான நோக்கமே மெய் நோக்கமாக உள்ளது. தன் இரக்கத்தால் நம்மை தேர்ந்தெடுத்து, அறியாமை அகற்றி அறிவெனும் வாடாத தீபமேற்றி நம் பிறவிப் பிணியை மாற்றுவதே காமீல்களின் நோக்கமாக உள்ளது. தன்னைப் போலவே நம்மையும் ஆக்குவதற்கான ஆசி வழங்கி நம் எண்ணங்கள் யாவற்றையும் மேல் நோக்கமாக மாற்றும் வல்லபம் ஆசானின் நாதத்திற்கே உண்டு. நம் எண்ணங்கள் பல கோடியாக விரிந்து எமனுடைய எல்லைக்கு செல்லாமல், மரணப் பிணியை மாற்றும் மாமருந்தாக வருவது ஆசானின் அருளமுதமே. பேசரும் பெரும் பொருளை பேசரும் வாசகம் கொண்டு பேசியளிக்கின்ற பெருமானான குருவே, நம் ஜீவனை தன்னில் அறிய வைத்து நம் மனக் கவலையை மாற்றி வைப்பவர். ஏட்டில் உள்ள பாஷைகள் எல்லாம் கரைத்திடினும் காட்டும் குருவில்லாமல் காண முடியாது என ஆண்டவர்கள் அருளியுள்ளபடி பொய் மெய்யும் பிரித்துக் காட்டும் வேதமாக வரும் ஆசானின் அருளைப் பெறுதலே பெருவரமாகும்.

**குருபிரான் அருளமுதம்:** ஆன்மாவின் ரகசியம் பற்றிப் பேசுவதே ஆன்மீகம். இறைவனை தெரிந்து தேடுவதே ஆன்மீகத் தேடல். ஆறாவது அறிவாகிய மெய்அறிவைப் பெற்றே இறைவனை அறிய முடியும். தன்னை அறிந்து தன்னுயிர் வீணாகாமல் தடுக்கும் செயலே உயிர்க் கொல்லாமை. நோக்கத்தின் இரு வகை, ஒன்று மேல் நோக்கமாகவும் மற்றொன்று கீழ்நோக்கமாகவும் உள்ளது. காலமே அனைத்திற்கும் தலையாக உள்ளது. ஆதி தலைநாளில் மனுமுளை துவங்கிய நாளிலிருந்து வந்த அதனை நாம் ஆக்கி வைப்போம் என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். சர்வத்தையும் அடக்கியுள்ள காலத்தை நோக்கியே நமது நோக்கம் இருக்க வேண்டும். ஓதக்கூடிய ஒன்றாக பிரவாகமாக இருக்கும் அதுவே வெட்டாத சக்கரமாக எட்டாத புஷ்பமாக இறையாத தீர்த்தமாக உள்ளது. தேரைந்து மந்திரமான தேவரகசியத்தை அறிந்தவர்களே தேவர்கள் என்பது திருமறைத் தீர்ப்பாகும் என்ற குருபிரானின் அருளமுதத்துடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

**01-10-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா**

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் போற்றி **என்ன காலம் இறைவன் திருவருள்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை மலரச் செய்தார்கள்.

*ஜீவசகோதரி பத்மாபதி:* மக்களை பிறவிச் சுழலில் இருந்து மீட்டு உய்விக்க வந்ததுவே மதங்கள். ஓர் மெய்க் குருபிரானின் அன்புக்கு பாத்திரமாகும் போதே மெய்யில் நிலைக்க முடியும். ஆண்டவர்கள் தங்கள் குருபிரான் தனிகைமணிப் பிரானை இடையறாது தொடர்ந்து, ஒத்தை மனம் கொண்டு சர்வ சன்னதங்களும் பெற்று உண்டாக்கிய மெய்வழிப் பாதையில் நாமும் நம் குருபிரானின் திருவடி போற்றித் தொடர்ந்து மெய்யைப் பெற்று உய்ய வேண்டும்.

**குருபிரான் அருளமுதம்:** தொன் பழ வினையைக் கைவிட்டு படர்ந்த முச்சகமும் தாண்டி, சர்வ படைப்பும் திரண்டு வந்த மந்திரகிரி மலையான தன் ஆசான் ஒன்றே அருட்கதி, ஓம் கதி என அவரவருள் சரணாகதி அடைவதுவே ஜீவன் உய்வதற்கான வழி. ஜீவனாக, சிவமாக இருக்கும்



Copyright © AMNA Trust, Chennai 

பொருளை அறிவதுவே தன்னை அறிதல். தன்னை அறிந்து தனக்கு ஆதாரத் தலைவனை அறியும்போதே ஒருவன் திருவடிப் பேற்றை உணர்ந்தவன் ஆகிறான்.

*ஜீவசகோதரர் கோபிநாத்:* மனிதனின் உலக வாழ்விற்கான கடமைகளை விட, அவரவரும் தன் நாமத்தை தரிசிக்க செய்ய வைக்கும் ஓர் சற் குருபிரானைத் தேடி அடைவதுவே அதிமுக்கிய உயிர்க் கடமையாகும். இறைவன் மனுக்களுக்கு வயது தந்நதின் பிரயோசனமான மெய்ப்பால் அறிவதே முந்தின கடமை எனும் தன்னை அறிதல். தன்னை அறிவதும், இவ்வுடம்பு எடுத்தது எதற்கென எண்ணுவதும், இறப்பும் பிறப்பும் எங்கே என ஆய்வதுமான சவாலான மெய்ஞ்ஞான கடமைகளை நிறைவேற்றி நாம் பெற்ற பெரும் பேற்றை வையகத்தில் பரவச் செய்வதே நம் தலையாய கடமையாகும்.

**குருபிரான் அருளமுதம்:** அழியாத தௌஹீதை அளித்த பிரானாகிய நம் ஆண்டவர்களின் திருநாமத்தை ஓங்கி உரத்த குரலில் அறிக்கை செய்ய வேண்டியதே நம் முதற்கடமை. அதற்கே என்றென்றும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

*ஜீவசகோதரர் மாதவன்:* மூச்சு துண்டாடப்பட்டு நஷ்டமடையும் தன் குற்றம் என்பதின் காரணமான மனம், ஆசான் அருளால் அலைவற்று நிர்குணம் ஆகும் பொழுது லாபமாகிறது. குருவருளால் உடல் உயிர் ஆன்மாவின் ரகசியம் அறியும் போதே, நமது நித்திய சொந்த தேகத்தில் குடியேறி இறைவன் இருக்கும் திருஸ்தலத்தை அறிய முடியும்.

**குருபிரான் அருளமுதம்:** மூச்சு வீணாகாமல் இருக்கும் லாபத்தையே ஆண்டவர்கள், சுவாசம் தெற்கு நோக்கி ஓடாமல் லாபத்தில் மாறி ஓட வேண்டும் என அருளியுள்ளார்கள். சகல உடல் இயக்கத்திற்கும் மிக அவசியமான மூச்சில் தான் ஜனனமே நிகழ்கிறது. ஆன்மாவை நோக்கிய அகமிய எண்ணம் அறிவின் வழியாகவும், உடலோடு சேர்ந்த புறநோக்கான எண்ணம் மனதின் வழியாகவும் இருக்கிறது. மனம் அலைவுறாமல் இருப்பதற்கான வழி, கூர்மதி கொண்டு சத்திய செயலில் நிலைப்பதேயாகும். மனதின் துணையோடு ஜீவனை அறிந்த பின்தான் உணர்வும் மனமும் கரைகின்ற இடமாகிய ஆன்ம வீடு அவரவர் நாமமாக, இல்லறமாக, ஆறுபடை வீடாக, சர்வமும் போய் ஒடுங்கும் ஊமை மூலமாக, ஓ முடிந்த பட்டணமாக இருப்பதை அறிய முடியும்.

*ஜீவசகோதரி செல்லம்மா:* மனம் உணர்ச்சியோடு கீழ்நோக்கமாக மாறும்போது சைத்தானாகவும், அதுவே மெய் உணர்வுடன் மேல்நோக்கமாக மாறும் போது சுல்தானாகவும் உள்ளது. ஆசானின் தயவால், ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மலம் கருகி, முச்சுடராக மாறும் போதே தாவுகின்ற மனம் சைதன்யமாக மாறுகிறது.

*ஜீவசகோதரர் பழனிவேல்:* இறை நிலையடைய மனிதனிடம் தடையாக இருப்பது அவனுடைய மாறும் செயலுடைய மனமே. **நான் மனிதனிடம் மனமாய் இருக்கிறேன்** எனக் கூறும் கிருஷ்ண பரமாத்மா மனம் கடந்த பெருவெளியில் இருப்பவர். குணங்களால் விலங்குகள் போல் மாறும் மனிதன், நிர்குணமாகும் போது தன் சொந்த தேகமாகிய கைலாயம், வைகுண்டம், மெஹராஜ் என்ற நிலைக்கு செல்கிறான். கூரான குருவருள் எனும் யுகாந்தநாட்டு செல்வத்தின் மூலம் மனம் ஏகபாத மூர்த்தி எனும் நிலையடைகிறது. மெய் ஆசானின் சொல்லுக்கு இணங்கி நடக்கும் பொழுதே எண்ணம்,சொல்,செயல் யாவும் நன்மையாக மாறும்.

**குருபிரான் அருளமுதம்:** மெய்வழி ஆண்டவர்கள் அருளிய திருப்பாடல்கள் நம் ஜீவனுக்கும், உயிருக்கும் வழங்கப் பெற்றதாகும். அன்பெனும் பிடிக்குள் அகப்படும் மலையாக அன்பெனும் வடிவாக அனைவரிடமும் இருக்கும் ஜீவனின் இரகசியத்தை ஆசான் அருளால் அறிந்தால் சிவம் ஆகலாம். ஆசான் மீது நாம் வைப்பது நேசமாகவும், ஆசான் நம் மீது வைப்பது அன்பாகவும் உள்ளது என்ற குருபிரானின் அருளமுதத்துடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

*பிரியமானவளே! தார்க்கிகரும், வாயில் வேதத்தை ஓதுவோரும், சோதிடத்தை அறிந்நோரும், கர்மாக்களைச் செய்வோரும், இலௌகீகரும் சிதைவின்றிய குருதத்துவத்தை யறியார்கள்.* ***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

**06-10-2023 ~ வெள்ளிக்கிழமை ~ சென்னை**
**குருபிரான் அவதாரத் திருநாள் சிறப்பு அவை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்**

சாலை ஆண்டவர்கள் அருளிய **என்ன காலமிறைவன் திருவருள்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.



**குருபிரான் அருளமுதம்:**
பன்னெடுங் காலம் காணாது, கேட்டறியாத இறைவன் திருவருளை அறிந்து நெஞ்சம் களிப்புறச் செய்வது மந்திரத்தில் வாசம் செய்யும் கோளரிவாளரின் தயவேயாகும். படைத்தான் படைப்பனைத்தும் மனுவுக்கே. மனுவைப் படைத்தது தன்னை அறியும் நற்பலனாகிய உயிர் மதி வாழ்வுக்கே. இதுவே பிறந்த நாளின் சிறப்பாகும். ஆட்சியெனும் சிரஞ்ஜீவி சஞ்ஜீவியாகிய அமானிதம் எனும் அத்வைதம், புறத்தில் செல்லும் பொழுது மனமாக மாறுகிறது. ஆசானருளால் ஊணுறக்கம் கவலை குறைந்து கள்ளம் நழுகி உள்ளம் உருக ஞான வெள்ளம் பெருகும். பெரியோர்கள் மாய ஜாலங்கள் செய்வதில்லை. நிஜமான ஒன்றை, உள்ளது உள்ள படி உரைக்கும் கூராக உள்ள குருவருளே கூர்ந்து போற்றக்கூடிய ஒன்றாக உள்ளது.

*ஜீவசகோதரர் குமார்:* அவமாகிய உடல் தரித்து வரும் பெரியோர்களே அவதார புருஷர்கள். அவர்கள் அருளும் ஜீவசுதந்திரம் அறிவின் மேனிலையுடன் நம்மை மானிடராக்கி புனித மறுபிறப்பில் ஆக்குகிறது. அலையும் நம் மனதை அறிவாக மாற்றி இறைவனின் திருவடி சேர்ப்பது மெய் ஆசானின் வாய்மையே.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* ஞானிகள் உண்டாக்கும் கட்டமைப்பும், நெறிமுறையும் இறைவனின் ஆசீர்பாதத்தையும், அருளையும் பெறுவதற்கான வழியாகும். பெரியோர்களின் காலில் விழுந்து ஆசீர்பாதம் வாங்கும் சடங்கானது, அகமியத்தில் தலையும் காலும் சேரும் இடமாக உள்ளது. அசலான தலையும் காலும் அறியும் போதே கால் மேலும் தலை கீழுமான ரகசியம் அறிய ஏதுவாகும். அறிவிருக்கும் தலமாகிய அதனை அறிவிப்பவர்களே அவதாரமாக உள்ளார்கள். ஆதி மான்மியத்தில் சாலை ஆண்டவர்கள் அருளிய ஒன்பது பருவத்தில், முடிவற்ற வளர் குழந்தை குமார பருவம், அகில வலம் வரும்பருவம், ஜீவசிம்மாசனப் பருவம் உணர்த்தும் செயலானது, அவதரித்து கொண்டே இருக்கும் வளர் குழந்தையும், அதன் மூலம் நடைபெறும் அகில வலமும், அதன் மூலம் ஒவ்வொரு மனுத் தலையையும் ஜீவசிம்மாசனத்தில் ஏற்றி வைக்கும் செயலாகவும் உள்ளது. உயிருக்கான அறிவறிவித்து ஒருவனை தன் சொந்த தேகத்தில் குடியேற்றி வைக்கும் செயலே அனைத்து மதங்களின் அடிப்படை நோக்கமாகும். அவசரகதியான நரனை நல்லகதியான மனுவாக மாற்றி சிவகதியாகிய தேவப் பிறப்பில் ஏற்றி வைப்பவர்களே மெய்க் குருபிரான்.

*ஜீவசகோதரர் மணிவண்ணன்:* அனித்திய உடல் பிணி தீர கஷாயமும், நித்திய உடலாகிய ஜீவனைக் காப்பதற்கு ஞானிகள் அருளும் காஷாயமும் உள்ளன. கைலாயம் செல்வதற்கான வாகனமான நந்தி என்பது பெரியோர்களின் திருவாயினின்றும் வருகின்ற வாய்மையின் கனமாக உள்ளது. அவரவர் நாமமாகிய மெய் மேனியை மெய்யாக்கிட பெரியோர்கள் செய்வதே அறிக்கை. ஆதியும் அந்தமும் அறியாது நாட்களை வீணாக்கும் மானிட தோற்றமுள்ள நரனை மனுவாக்கி, மனுவை தேவனாக்கி பிறவி சுழலாகிய நரகிலிருந்து மாற்றி அவரவரின் சொந்த தேகமாகிய சொர்க்கத்தில் குடியேற்றி வைப்பவர்களே ஞானிகள். மும்மலம் அகற்றும் சின்முத்திரை அருளி எமபயம் கடத்தும் குருவே இறைவன் என்ற பகிர்வுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.


Copyright © AMNA Trust, Chennai

**12-10-2023 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்**

**அருட்சோதித் தெய்வம் எனை ஆண்டுகொண்ட தெய்வம்...** என்ற திருவருட்பா பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

**வான்மதிக் கொரல் வாக்கியம் எண் – 218:** பெரியோர்களின் தயவால்தான் அவர்கள் பெற்ற தேவ சன்னதங்கள் இன்னதென நாம் அறிய முடியும். ஒவ்வொரு காலத்திலும் வரும் பெரியோர்கள் தன்னிடம் மெய்ப்பொருள் நாடி வரும் அன்பர்களுக்கு உயிரான அன்பை தன்னலம் கருதாமல் அருள்கிறார்கள்.

*ஜீவசகோதரி பானுமதி:* **திருக்குரான் சிறப்புகள்:** 114 அத்தியாயங்கள் கொண்ட திருக்குரான் உலக மக்களுக்கு நேர் வழி காட்டி, உலக வரலாற்றை மாற்றியமைத்த, அப்பழுக்கற்ற தூய இறை மறையாக, வாழ்விற்கு தேவையான புரட்சிகரமான வேத நீதி நூலாக விளங்குகிறது.

**அத்தியாயம் – 01 அல் ஃபாத்திஹா:** அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புள்ள அல்லாஹ்வின் அருளால், கருணையுடன் வரும் மெய்க்குருபிரானை நாடி மெய்யைப் பெற வேண்டும் என்றும், அவருடன் யாரையும் இணை வைக்கக் கூடாது எனவும் அருளப் பெற்றுள்ளது. இறுதியாக வரும் எமனின் மரண அவஸ்தையில் இருந்து மாற்றி னித்தியத்தில் ஆக்கி வைக்கும் குருவே இறுதி தீர்ப்பர் ஆவர். உண்மை நெறியும், இறைவனை அடையும் வழியும் அருள வேண்டி இறைவனிடம் இறைஞ்சுதல் வேண்டும். **வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல (திருக்கொரல்)**

**அத்தியாயம் – 02 அல் ஃபகரா:** அல்பகரா எனும் பசுவான ஜீவனை குருபிரானின் துணை கொண்டு அறிந்தால் பரமபத வாழ்வு வாழலாம். ஐம்புலன்கள் மூலமாக அனுபவிக்கும், பஞ்ஞாட்சரப் பொருளையே, சத்திய வேதத்தில் **நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்** எனவும் **மனிதனை பிரகாசிக்க செய்யும் மெய்யான ஒளி நானே** எனவும் அருளப்பெற்றுள்ளது. **எண்டிசைக்கும் னானென முன்னிற்கும் பஞ்ஞாட்சரமே** என சாலை ஆண்டவர்களும் ஜீவனின் ரகசியத்தை அருளியுள்ளார்கள். அனைவரிடத்திலும் சிவனாகவும், ஜீவனாகவும், பிரம்மமாகவும் இருக்கும் ஒன்றையே வள்ளல்பிரான் – **நான், ஆன்மா, பசு, சிற்றணு வடிவினன். கோடி சூர்ய பிரகாசம் பொருந்தியவன்** என அருளியுள்ளார்கள்.

**குருபிரான் அருளமுதம்:**

ஓசை ஒலி கொண்டு மனிதர்களை மகான்கள் ஆக்குகின்ற அருந்தவ மந்திரங்கள் உள்ளடங்கிய அலீபு-லாம்-மீம் எனும் மூன்று அட்சரங்களை உள்ளடக்கியதே திருக்குரான். ஓசை ஒலியால், பெரியோர்கள் தன்னை நாடி வரும் பக்தர்களை ஆற்றுப்படுத்தும் செயல் திருமுருகாற்றுப் படையில் அருளப் பெற்றுள்ளது. வேல் எனும் அறிவும், மயில் எனும் மனமும் கைலாயம் அழைத்துச் செல்லும் வாகனமாக இருப்பதையே சாலை ஆண்டவர்கள், தெய்வத் தேடு கூடகத்தில் நாடகத் தமிழாக அருளியுள்ளார்கள். அவர்களே சுத்த சைதன்ய நாதராக தன் சொல் ஒரு பொருள் கொண்டு செத்து தினம் பழகும் வித்தையை அறிவித்து பாவத்தை முறித்து வட்டாக்கும் வள்ளலாகத் திகழ்கிறார்கள். ஆதி மார்க்க னீதி அவையின் மூலமாக சாதி பேதம் தீர்த்து சமரசம் ஆக்கும் ஓர் திருஸ்தலமாக **சரவண நந்தவனம்** அமைவதற்கான தெய்வீக காரியத்தில் ஒத்துழைப்பு நல்கிய நல்லுள்ளம் கொண்ட மக்களை வாழ்த்தி, பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி, ஸ்தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai 

**14-10-2023 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி வணங்கி அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்: தோன்றின் புகழொடு தோன்றுக...** எனும் திருக்கொரலுக்கு ஏற்ப உடலுள்ள போதே நித்திய புகழுடம்பைப் பெற்ற மகான்கள் தாம் பெற்ற அரும்பெரும் நிலைகளை தம்மை அண்டி வந்த மக்களுக்கு வேதமாக அருளி செயலாக்கும் திருச்செயலை நினைவூட்டும் நாளே மகாளய அமாவாசை தினம்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் - 147:** அறிவறியா மனம் தற்புகழ்ச்சி எச்சித்தனத்தையே விரும்பும். எல்லா விதத்திலும் தன்னைப் பற்றி நல்லவன் என்ற புகழ்ச்சியை விரும்புதல் மெய்ஞானப் பாதையில் துக்கம் தரும் இகழ்ச்சியாக மாறி நிற்கும். குருபிரானின் திருவடி னிழற் பாதையில் ஒத்தை மனம் படைத்து வேதவழியில் நடப்பதே அழியாத மதித்தனமாகும்.

*ஜீவசகோதரர் குமார் :* **சத்திய வேதம்:** பரலோகத்தில் சாட்சியிடும் பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். பூலோகத்தில் சாட்சியிடும் ஆவி, ஜலம், ரத்தம் இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது. பரலோகம் சிபத்தான அமானிதமாகவும், பூலோகம் நபுசான மனமாகவும் உள்ளது. கர்த்தராகிய குருபிரான் மறுபிறப்பு தந்த பிதாவாக, திருவார்த்தை வழங்கும் தாயாக, பரிசுத்த ஆவியால் நம்மை அறிவாக மாற்றி பரலோக ராஜ்யத்தில் குடியேற்றி வைக்கிறார்கள். ஆன்மாவாகிய ஜலத்தின் மேல் ஆவியான பிராணன் அசைவாடிக் கொண்டிருக்கிறார். குருவானவர் அருளமுதமான பானமாயிருக்கும் இரத்தத்தால் நம் பாவம் போக்கி நம் இருதயத்தில் ஆண்டவராக குடியேறுகிறார்கள்.

**குருபிரான் அருளமுதம் - ஐம்மணிப் பொதிகை:** ஒன்றான ஐம்மணியாம் பொதிகையான, அறுசுவை ஒளியும் இடமான, பஞ்ஞாட்சரப் பொருளின் நிலைகளை குருவருள் பெற்ற குருவின் தயவால்தான் உணரமுடியும். மவுன மாமாணி மாடத்துள் தென் திசையில் உள்ள கயிலாய அவுஷத மாமருந்து கொண்டு நவபாஷாண உப்பை கற்பமாக மாற்றி அருந்தும் நிலைகளை வேதத்தில் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். காரண தேகமே சொர்க்க மத்திய பாதாளமான நமது அகமிய உலகிற்கு காரணமாக உள்ளது.

*ஜீவசகோதரர் கோபி:* **பரிணாம வளர்ச்சி - தசாவதாரம்:**

1) **மச்சம்** - மீன்.
   **கச்சினிப் பெண்ணவள் பச்சிளம் னெற்றியில் மச்சங்ஙிடக்குது பாருங்ஙடி (பொன்னரங்ஙக் கொம்மி)**
2) **கூர்மம்** - ஆமை.
   **ஒருமையுள் ஆமை போல் ஐந்தடக்கல் (திருக்கொரல்)**
3) **வராகம்** - பன்றி. பகவான் மூக்கில் பூமியை தாங்கிப் பிடித்தது.
   **சேவை பூமிமூக் கானபோல் (மெய்ம்மண ஞானம்)**
4) **நரசிம்மம்** - நரனை சிம் மயமாக ஆக்கும் மெய்ச்செயல்.
   **னையிரண்யன் மேற்பாய்ந்ந னரசிம்மந்நா னெங்ஙே... (மெய்ன் னிலைப் போதம்)**
5) **வாமனர்** - கட்டை விரல் பிராமணன்.
   **காமக் கோடிபீடம் பெருவிரல்பதி கண்டறத் தின்வலம்வா (சோடச னிலை)**

காமாதியசுரர் கிளை கருவறுக்கும் தேவ சன்னதங்ஙள் கைக்கொண்ட அவதாரங்கள்.

6) **பரசுராமர்** – கோடாரி.
7) **ராமர்** - வில்-அம்பு.
8) **பலராமர்** - ஏர்.
9) **கிருஷ்ணர்** - சங்கு சக்கரம்.
10) **கல்கி** - வெண் குதிரை மேல் கையில் வாளுடன் அரூபமாக, உருவில் குருவாக வருபவர்கள். **அன்னமயில் வாசியென்ற குதிரை யேறி அகிலமண்ட மரைனொடியில் வரவு மாகும் (மெய்வழி னூல்).**
    இவை யாவும் அகமியத்தில் நான்கு தேக தவநிலை ரகசியமாக உள்ளது.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் சங்கர்:* னெற்றிக் கண்ணுடன் வந்த குருவருளால் நம் அகக்கண் திறக்கப் பெற்று, தசதீட்சை மூலம் தவனிலை பழகி மெய் உணர்வு பெறுகையில் அறிவு வடிவான தசாவதாரத்தின் மேன்மையை அனுபவத்தால் அறியலாம். ஐம்மணி பொதிந்துள்ள தேகமே பொதிகை ஆகும். தென்னாடுடைய சிவன் அவரவர் தலையில் இருப்பதையும் கைலாயம் இருக்குமிடம் தெற்கு என்பதையும் அறியும் அறிவை அமலாம் பஞ்ஞாட்சர வாளாயுதமான பெரியோர்களின் திரு **னா** ஆடியதால் இன்று நாம் நாடிப் பெறுகிறோம். பூட்டுடைய சாவி கொண்டு திறந்து அள்ளி வழங்கும் வள்ளலின் திருப்பாதம் போற்றி ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

**15-10-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை**
**தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்**

சாலை ஆண்டவர்கள் அருளிய **அந்நமேசிந் நைபதிந்ந சந்நனகந் நங்ஙமழும் எந்நைமுனி தந்நை தந்நையே...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
முதலானது முடிவுக்குள் இருப்பதையும், அழியும் பொருளினுள் அழியாத பொருள் இருப்பதையும், 36 சிவ தத்துவ ரகசியமாக அறிவுகளாகவும், மெய்யான பஞ்ஞாட்சரமாகிய விபூதி கிட்டும் வரை நகல் விபூதியை நெற்றியில் பூசவேண்டும் எனவும் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் மகேஷ்:* அன்பு பல வகையாக இருந்தாலும், தாய் அன்பு முதன்மையாக உள்ளது. தாய், தந்தையின் அன்பும், ஜடப் பொருள் மேல் வைக்கும் அன்பும் நிலையற்றவையே. மூச்சு லயமாகிய மனோலயத்தை அருளி தேவ பிறப்பான மறுபிறப்பில் ஏற்றி வைக்கும் ஆசானின் நித்திய அன்பே நிலையானது. ஆசான் அருளால் மனம் அறிவாகும் போதே மெய்ஞானத்தில் நிலைக்க முடியும். உபதேசம் அருளும் ஆசானின் அன்பே நம்மை சிவமாக்கும். அவர்களின் திருக்கரத்தில் உள்ள பிரம்மவித்தை செயலே மனம் அலையாத சைவ நிலையில் நம்மை ஏற்றி வைக்கும்.

*ஜீவசகோதரி புன்னகை:* நம்மை தாங்கிப் பிடிக்கும் திருவடியான நற்றாளையே **னற்றுணைற்றாள்** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். பூமியின் சுழற்சியால் கால மாற்றங்களும், சந்திர சூரியன் தோன்றி மறைவதும் உண்டாகிறது. அகமியத்தில் இதனை அறிய வைத்து காலமற்ற இடத்தில் ஏற்றி வைத்து நவ கிரகங்களின் பிடியிலிருந்து நம்மை காப்பவரே குருபிரான். சூரியனின் வடதிசை, தென்திசை பயணமும் சந்திரனின் வளர்பிறை தேய்பிறையும், 12 ராசிகள் 27 நட்சத்திரங்கள் 108 பாத நிலைகள் யாவற்றையும் அவரவரின் அகமியத்தில் அறிய வைக்கும் ஆசானே ஈசனாக வருகிறார்கள். ஐம்புலனும் ஒன்பது வாசல் வழியே மனதின் தலைமையுடன் சார்ந்ததின் வண்ணமாக இருப்பதை அறிவாக மாற்றி ஆறாவது அறிவை அறிய வைப்பவர்களே ஆசான். ஒரு புள்ளியில் இருந்து விரிந்த இத்தேகம் நாம் அல்ல என்பதை உணர்ந்து மீண்டும் அதில் போய் அடங்குவதே அடக்கம்.

*ஜீவசகோதரி வைஷ்ணவி:* மனத்தெளிவு பெற்றே அறிவு தெளிவு பெற முடியும். நரன், மனு, தேவன், இவற்றில் நாம் யார் என்ற தெளிவு பெற ஆசானின் அருளமுதத்தை உள்வாங்கும் செவித் தெளிவு வேண்டும். தெளிவின் முழுமையான நிலையான ஞானம் பெற, சரியை, கிரியை, யோகம் என்ற ஒழுக்க நெறிகளை ஆசான் மூலம் அறிய வேண்டும். தனக்கு உவமை இலாதான் தாள் சேர்ந்து ஜீவன் சிவமாகும் போதே, தெளிவுடன் குருவின் திருமேனி காண்பதும், திருவார்த்தை கேட்பதும், செப்புவதும், திருவுரு சிந்திப்பதும் கை வரவாகும்.

*ஜீவசகோதரர் கவனமணி:* ஆசான் அருளால் பிறவா நிலை பெறுவதே மனுவின் கடமை. உலக பற்று விடுத்து பற்றற்ற பரம்பொருள் மீது நாட்டம் கொண்டு நலமுடன் வாழ நாதனாக வரும் நல்லோர்களின் நாதமே துணை என்ற பகிர்வுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் ஆண்டவர்கள் திருவடி போற்றி அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai 

**17-10-2023 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்**

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
மாதங்கள் அனைத்திலும் உள்ள ஆகம விதி உள்ளமை ரகசியங்களை, தனக்குள் நிதர்சன நிரூபணையாக கண்டவர்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

**வான்மதிக் கொரல் - வாக்கியம் எண்-128 :** யுகநீதி தீர்ப்புக் கர்த்தர், மக்களின் உடலாகிய அனித்திய தேகப் பற்றை நீக்கி, நித்திய தேகத்தில் குடியேற்றுகிறார். வசந்த காலமாக வரும் ஞானிகள், மக்கள் தங்கள் அகமியத்தில் காயத்திரியை சந்தித்து வந்நனம் செய்ய, காலனுக்கு முடிவுகட்டும் சத்திய வழியை அருள்கிறார்கள். அவர்களின் வாய்மையே எக்காலத்திற்கும் அழியாத நித்தியப் பொருளாக உள்ளது.

*ஜீவசகோதரி பானுமதி :* **திருக்குரான் அத்தியாயம் 2 :** வேதத்தின் தலையான அலிபு-லாம்-மீம் எனும் முப்பொருளை மனிதன் தன்னுள் விளங்கிட குருவருள் வேண்டும். மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்கள், குருபிரானின் அறிவே விந்துவாகவும் அது சீடனின் செவியில் நாத வடிவாகவும் பாய்கிறது என சுப்ரமணியர் யோக ஞானத்தில் குறிப்பிட்டுள்ளதை அருளியுள்ளார்கள். நரசிம்ம அவதாரத்தில் ஹிரண்ய சங்காரம் நடைபெற்ற இடமான வாசற்படி ஆசானின் னாதமே என்பதனை ஆசான் அருளால் தான் அறிய முடியும். அவதாரங்கள் யாவும் உணர்த்துவது அடி-முடி-னடுவின் ரகசியமே. உடல் கண்டு உயிர் வழி பற்றி ஓடி ஆத்ம வீடடைவதை உணர்த்துவதே அலிபு-லாம்-மீம். சாலை ஆண்டவர்கள் பாதமே வேதமெனவும் வேதமே பாதமெனவும் அருளியுள்ளார்கள்.

**குருபிரான் அருளமுதம்:**
அலிபு-லாம்-மீம் எனும் அட்சர மூன்றையும் அறியும் அறிவை பெற்றவனே மனிதன். **உ** எனும் பிள்ளையார் சுழியே எழுதாத எழுத்தாக, ஜீவனாக, நடுப்பொருளாக இருப்பதை ஆசான் அருளால்தான் அறிய முடியும். ஜீவனே மூன்று அட்சரம் சேர்ந்த ஏகாட்சரமாக உள்ளது என்பதை செயலாக உணர்ந்தவர்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

**ஐம்மணிப்பொதிகை:** ஆதி எனும் ஜீவன், மெய் எனும் அழியாமை, உதயம் எனும் பிரகாசம், பூரணம் எனும் முழுமை இவற்றை உள்ளடக்கிய வேதாந்தமே ஒன்றான ஐம்மணிப் பொதிகையாக உள்ளது. தன்னைத் தான் அறிந்திட வந்ததுவே சர்வ வேதங்களும். இறை பொருளான அலிபு-லாம்-மீம் என்பதே அவரவரின் நாமத்திற்கான பொருள். மறைமொழி மாந்தரின் திருமொழியை குறைமொழி மாந்தரால் அர்த்தம் செய்ய இயலாது. முறைகுருவை போற்றாமல் உயிரொட்டிய இரகசியமான சமத்துவம், சமரசம், சமாதானத்தை உணர முடியாது. நம் ஆணவமலம் பொடியும் போதே **குன்றேறும் தனிகையராம் சுதன்** என்பதின் உன்னதம் உணர முடியும். **குருமார்க்க நாதரிட பாதம்** குறிப்பது இடமாகிய அறிவிருக்கும் தலம். உணர்வுகார ரகிதமாக, பிறவிப்பிணி போக்கும் அறிவின் சுவையாக, குருபிரானின் ஓசை கொண்ட நடனமாக வருவதே தென்திசையின் கயிலாய அவுஷதம். அதை உண்ட தேவர்களே சா முன் சாகப்பழகிய அமரர்கள். தேரைந்து மந்திரமான ஐம்பொருளும் முப்பொருளுள்ளும், முப்பொருள் ஆறு பொருளுள்ளும், ஆறு பொருள் ஏகாட்சரமான ஒரு பொருளுள்ளும் உள்ளன. பஞ்ஞு பூதத்தலை அரசன் பாதமெனும் ரகசியத்துள் பஞ்ஞாட்சரமாக மிளிர்கிறது. இதனை அறிந்தோரே குரு குலத்தோர். எழுதாத எழுத்தென்னும் எழுத்துள் அடங்காத சிவமயப்பொருளே ஆகாயமெனும் அழியா னிலமாக பஞ்ஞாட்சரமாக அவரவரின் சிரசில் சீராக உள்ளது என அருளி, ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

*மகாதேவி! சகல ஆனந்தத்தைத் தருவதும், சகல சௌக்கியத்தைத் தருவதும், போக மோக்ஷங்களைக் கொடுப்பதுமான குருவின் தியானத்தை மேலும் கேட்பாயாக. ~* ***குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

**21-10-2023 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**



**குருபிரான் அருளமுதம் - ஆயுத பூஜை சிறப்பு**

மகாபாரதத்தில் நிபந்தனைப்படி, பஞ்ச பாண்டவர்கள் வனவாசத்தின் போது தங்களின் ஆயுதங்களை ஒரு வருடம் மறைத்து வைத்து பின்னர் எடுத்து பூஜை செய்து வழிபட்ட தினமே இன்றளவும் ஆயுத பூஜை தினமாக உள்ளது. இதன் உட்பொருள் யாதெனில், ஒரு மெய் ஆசானின் கோடாயுதத்தால் நம் கொடுவினைகள் களையப்பெற்று, மனக் கண்ணால் அழியாத மெய்ப்பொருளைக் கண்டு விசுவாசித்து, ஆதி வாலையவள் இருக்கும் வீட்டில் குடியேறி அசலான பூஜை செய்து வழிபடுவதே ஆயுத பூஜையாகும்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் - 148:** சகல பிரளயங்களிலும் ஞானிகள் சரீரத்தை துறக்க வேண்டியவர்களே. ஆனால் பஞ்ஞின் இழைக்கும் நுட்பமாக உள்ள தமர்வாசல் கண்டு திறந்து ஏற வல்லமை பெற்றவர்கள் எக்காலத்தும் இருந்து எந்த ஆயுதத்திற்கும் தட்டுப்படாத ரூபமாக ஆகிறார்கள். முத்தி எனும் மூலமணிப் பதத்தின் ரகசியம் பொதிந்துள்ள னினைவே முத்தி அடைவதன்றி இத்தேகமல்ல. எந்த ஆயுதத்திற்கும் தட்டுப்படாத ரூபமாக வரும் ஆசானின் அருளமுதமே முத்தி வீட்டில் நம்மை குடியேற்றி வைக்கிறது.

*ஜீவசகோதரர் கோபி:* **ஸ்ரீமத் பகவத் கீதை - க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விபாக யோகம்:** யாரும் கட்ட முடியாத திருமாளிகை எனும் நம் தேகமாகிய ஷேத்ரத்தில் ஆத்மனாக நின்று விளங்குபவனே க்ஷேத்ரக்ஞன். இதனை பிரகிருதி, புருஷன் என்ற பிரம்ம தத்துவ செயலாக உணர்த்துபவரே குருபிரான். **உபத்ரஷ்டா** (சாட்சி) ; **அநுமந்தா** (உண்மையான ஒப்புதல்) ; **பர்தா** (தாங்கி நிற்பது); **போக்தா** (அனுபவித்தல்); **மகேஸ்வரா** (அரசர்) என 5 நிலைகளில் சாக்ஷி பூதமாக, அரசனாக, க்ஷேத்ரக்ஞனாக நிற்பவனே அசைவற்ற பரம்பொருளாகிய புருஷன். குருவருளால் மூன்றாவது கண் திறக்கப் பெற்றவர்களுக்கே இந்த யோகபலன் கிட்டுகிறது. இதனை செயலாக உணர்ந்தவர்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

**குருபிரான் அருளமுதம் - ஐம்மணிப் பொதிகை:**

தென் திசையின் கைலாய ஔஷதமாகிய பஞ்ஞாட்சரம் விபூதி, வெந்நீறு, திருநீறு, னாத மருந்து, **ம்** மருந்து எனும் மாமருந்தின் செயலை உலகறிய உணர்த்துவதே ஐம்மணிப் பொதிகை. **தொட்டவுடன் சுட்டுவிடும் எங்ஙள்... பஞ்ஞாட்சரமே.** இறைவனின் சுக சொரூபத்தை கைவிட்ட குறையால் நாம் பிறவிச் சுழலில் சிக்கியுள்ளோம். பஞ்ஞாட்சர மேனி படிந்த குலதெய்வமாக வரும் குருபிரான், நம் பாவங்களை சுட்டு சுறுசுறுப்பும் உயிருள்ளதுமான சுகவுடலில் மீண்டும் நம்மை குடியேற்றி வைக்கிறார்கள். உலகை இரட்சிக்கும் அஷ்டதிக்கு பாலகர்களாக ஓமசத்தி, பிரணவனாயகி, லோகரட்சகி, ஜகன்மாதாவாக விளங்குவது ஜீவனே. சர்வ வேத மாமறைகள் புகழும், சகல உயிர் ஜீவனிலும் ஆடும் பாதமே பஞ்ஞாட்சரமாக, நம் உடலை இயக்கும் கர்த்தாவாக, னாத உடலாக இருப்பதை ஓரறிவாக நின்று கவனிப்பவரன்றி மற்றவர் அறியார்.

ஏழு மண்டலம் கடந்த ஆத்மனின் இருப்பிடமாகிய விண்டலமே, சர்வத்தையும் உள்ளடக்கிய வல் ஊமையாக, எழுதாத எழுத்தாக, கூறாத அட்சரமாக, ஆகாயத் தத்துவத்துள் அடங்கிய அனைத்தையும் விழுங்கி உமிழும் பஞ்ஞாட்சரம். எதற்கும் முதற் பொருளாக நின்று விளங்கும் ஜீவனை காணச் செய்து ஜென்ம சாபால்யம் அருளும் ஆசானின் னாதமே எதிர்



Copyright © AMNA Trust, Chennai

ஜலத்தில் ஏறும் ஏடான பஞ்ஞாட்சரமாக உள்ளது. காலன் அணுக முடியாத மெய்வழி எனும் மேடிலங்கும் அறிவு தேகமாகிய பஞ்ஞாட்சரம், உள்ஞானக் கண் கொண்டே காண்பதாக உள்ளது. அழிதேக பற்றுடையோர்க்கு எம கண்டமாகவும், குருபிரான் அருளும் கனக வைப்பு எனும் தங்க உடலில் குடியேறிய நித்திய தேகப் பற்றுள்ளோர்க்கு கமல பஞ்ஞாட்சரமாகவும் விளங்குகிறது என அருளிச் செய்து ஆசான் அவையை நிறைவு செய்தார்கள்.

**22-10-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி அவை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்**

சாலை ஆண்டவர்கள் அருளிய **பாடும்செவி ரூபகந்ந மும்பரிச மஞ்ஞினைக்கொண் டேயறிவ தெவ்வறிவதே** என்ற பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* தன் ஆன்மாவைக் கண்டு நேயமாக இருக்கும் குருபிரானே ஆன்மநேயராக, ஆஞ்ஞநேயராக இருக்கிறார்கள். மெய் குருபிரானை, நம் தோற்றம் போல் எண்ணியதால் உண்டான பேதமையை அவர்களின் நாத தொனியால் மாற்றி சாலை வாழ்வாகிய சரியான சரி நிலையில் ஏற்றி வைக்கிறார்கள். சஞ்ஜீவி மலையாக வரும் குருபிரான் தரும் அவுஷதத்தை செவி வழியாக அருந்தும் போது எமனை நாம் வெற்றி கொள்ள ஏதுவாகிறது. ஆண்டவர்கள் அருளியுள்ள பிரம்மமாகிய ஃ எனும் ஆயுத எழுத்தின் சிறப்பை ஆசான் அருளால் உணர்ந்தவர்களே ஆயுத பூஜையின் சிறப்பை அறிய முடியும். குருபிரானின் கோடாயிதமே எமனை வெல்லும் ஆயுதம். அவர்களின் இரக்கத்தின் மூலமே நாம் அதைப் பெற்று எமனை வெல்ல முடியும். அவர்களின் மலர்க்கையாகிய ஆயுதமே நம் துன்பங்களை மாற்றுகிறது. கிருஷ்ண பரமாத்மா வாய் திறந்து **ஆ** என காட்டினார் என்பது சர்வமும் அடங்கியுள்ள அகரத்தை காட்டிய செயலாகும்.

நம்மை படைத்து, காத்து, வழிநடத்தும் அழியாத வஸ்துவாக உள்ள பிரம்மம் பஞ்ஞாட்சரமாக, ஆண் பெண்ணற்ற நிலையாக உள்ளது. நம் உடல் உறுப்பு மற்றும் அந்த கரண கருவிகளை உலக அழி செயலுக்கே உபயோகிப்பதால் மனிதத் தன்மையை இழக்கிறோம். இறைவனின் ரகசிய பெட்டகமான மனிதன் என்பவன், மூலமந்திரத்தை வாயில் சொல்லிக் கொண்டும் தேடிக் கொண்டும் இருப்பவன். அவரவரின் சொந்த தேகமாகிய மூலமந்திரம் ஆசான் அருளால் ஆறாவது அறிவின் மூலமாக அறியக் கூடியதாக உள்ளது.

**குருபிரான் அருளமுதம்:**

தூண்டு குருநாதர் தன் அனுபோகத்தால் நம் அறிவை தூண்டத் தூண்ட அறிவுத் துலக்கம் உண்டாகிறது. சர்வத்தையும் விழுங்கி உமிழும் விண்டலம் எனும் ஆகாயமே நம்மிடம் நினைவாக உள்ளது. அதிலிருந்து முளைத்து வரும் ஜீவாத்மா, தன் சொந்த மூலவள நாட்டில் அமர்கையில் பரமாத்மா எனும் சர்வத்தையும் ஆளும் மூர்த்தியாக அழகு பொருந்தியதாக உள்ளது. அதுவே உறு பொருளாக அரும்பொருளாக அர்ரஹ்மானாக, உயிரொட்டிய ரகசியமாக, சமரசம், சமாதானம், நினைவு, நான், மனம், கவனம் என உணர வேண்டிய ஒன்றாக இருப்பதையே, **இதனை உணர்ந்ந பின் எடுத்தோதிக் கிரந்நம்** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். அகமியத்தில் அகக்கண் கொண்டு பார்க்கக்கூடிய பொருளாக இருப்பதே மூலமந்திரமும் பொன்னரங்க தேவாலயமும். அதுவே மனிதனின் சுத்தத் துறை இருதயமாக இறைவனின் இருப்பிடமாக உள்ளது. மெய்ஆசான் தங்கள் இரக்கத்தால், நானிலத்தில் நரஜென்மம் எடுத்த நரனை சங்காரம் செய்து மனிதனாக்கி, பின் பிரம்மத்தை அவன் முகத்தில் வைத்து படைத்து மறைபடா தேவனாக மாற்றுகிறார்கள். தெய்வக் கண்ணாடியாக வரும் பெரியவர்கள் முன்னிலையில் தான் நாம் நம்மை அறிய முடியும். இறப்பை நோக்கி செல்லும் நிறுத்த முடியாத ஒரு வண்டி போன்ற நம் உடம்பினுள் உள்ள அழியாத சூக்குமத்தை குருவருளால் கண்ட பின்பே காஷாயம் அணிவதற்கு நாம் அருகதை உள்ளவர்கள் ஆகிறோம்.

நித்தியப் பொருளான வேதத்தை ஆசான் அருளால் அறிந்து அதனுடன் பழகுவதே பிரம்மவித்தை. எழு பிறப்பும் கடந்து பரிசுத்த ஆவியின் மூலம் பிறப்பதே மறுபிறப்பு. மனிதனின் பிற்புற பிடரியில் நிறை நீதி ஆசனம் இட்டிருக்கும் வஸ்து வித்தாக நமது ஆரமாக இருப்பதை தொட்டு வணங்கும் நமஸ்காரமே பிடரி மார்க்கம். தன் நாமத்துக்குரிய பொருளை அறிவதே திருச்சிற்றம்பலப் பொருளை அறிவதாகும். சர்வ மூலமந்திரமும் நிரூபணையாகும்



Copyright © AMNA Trust, Chennai

இடம் மக்களிடத்தில் உள்ளது. இதனை செயலாக பெற்றவர்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள். புத்த பகவான் தீர்க்கதரிசனத்தில் செந்நிறமான ஆடைகளை அணிந்த தேவர்கள் உரக்கக் கூவி இவ்வாறாக அறிவிப்பார்கள் என்பதும் **ஆடையிலே எனை மணந்த மணவாளா** என அருட்பாவில் உள்ளதும் ஒரே செயலைக் குறித்தே உள்ளது என்பதை நாத பஞ்ஞாட்சரத்தின் இலட்சணம் அறிந்தவர்களே அறிவர் என அருளி குருபிரான் ஸ்தோத்திரப் பாடலுடன் அவையை நிறைவு செய்தார்கள்.

**22-10-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்**

சாலை ஆண்டவர்கள் அருளிய **மவுன மாமணி மாடத்துள் ளேறவும்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் உதயமானது.

*ஜீவசகோதரி கலைச்செல்வி:* ஒன்று முதல் ஒன்பது படிகள் வரை அறிவின் நிலைக்குத் தகுந்தவாறு பொம்மைகள் வைத்து நவராத்திரி கொலுவில் வழிபடுகிறார்கள். மனிதன் படிப்படியாக குருவருளால் ஆன்மீக சிந்தனைகளை வளர்த்து இறைவனுடன் ஐக்கியமாவதை உணர்த்துவதே நவராத்திரி கொலு.

*ஜீவசகோதரர் தாமோதரன்:* **இரு புரு வத்திடையி லேயொளிவு காணில் வருவதிலையே காலனே**. ஒளியாகிய உகாரப் பொருளை தன்னுள் கண்டால் காலனாகிய காலத்திற்கு அங்கு வேலை இல்லை. கல்வி, செல்வம், வீரம் - இதில் எது உயர்ந்தது எனில் பெரியோர்கள் வீரத்துடன் தங்களிடத்தில் உள்ள அழியாத கல்வியையும் செல்வத்தையும் மக்களிடம் சேர்க்கும் செயலே உயர்வானது. உலக மக்கள் தாங்கள் உபயோகிக்கும் ஆயுதங்களை வைத்து ஆயுத பூஜை செய்வது வழக்கம். அழிவற்ற ஆயுதமாகிய கோடாயிதம் கொண்டு பெரியோர்கள் நரனை சங்காரம் செய்து மனுவாக்கி தேவனாக்கும் நாளே நிஜமான ஆயுதபூஜை திருநாள். கருமார்களின் உலைக்கூடம் அறியாத ஆயுதத்தினை பெரியோர்கள் தங்களது சன்னதங்களாக தாங்கி வருகிறார்கள். மனிதன் தன் ஐம்புலன்களின் வழியாக, கவனம் எனும் மேலான பொருள் கொண்டு, செவியாகிய யோனியில் ஆசானின் னாவாகிய லிங்கத்தால் நடக்கும் சிவபோகம் அனுபவிக்கும் செயலே பிறவாமை பெறும் வழியாக உள்ளது.

*ஜீவசகோதரர் சங்கர்:* உலகில் புழக்கத்தில் இல்லாத பேச்சாகிய ஜீவனுக்கான மெய்க்கல்வியை அருள பெரியோர்களே நம்மை தேர்வு செய்கிறார்கள். மெய்ஞானத்திற்கு புறம்பான ஒன்றை விட்டு **காத வழிக்கு அப்புறத்தே ஒதுங்கி னில்லே** என மெய்வழி னூலில் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். வைராக்கியமும் நம்பிக்கையுமே மெய்ஞானத்திற்கான சாதனமாக உள்ளது.

**குருபிரான் அருளமுதம்:** ஜீவ சிம்மாசன கொலுவில் நம்மை ஏற்றி வைக்கவே பெரியோர்கள் வருகிறார்கள். பண்டை நான்மறை வேதங்களும் சிவபெருமானால் அருளப் பெற்றவையே. எமனின் அதிகாரத்தை முறியடிக்கும் ஆயுதமே இறைவனின் திருக்கரத்திலுள்ள சன்னதங்கள். பெரியோர்களின் நாதம் விளைந்த சொல்லே மேலான மந்திரமாக இறைவனின் அடையாளமாக உள்ளது. குருவருளால் அகங்காரம் அற்று நரனாக இருந்தவனை ஆதியின் நாவு, கயிலை மாதவன் நாவு கொண்டு பரிசுத்த ஆவியால் மனுவாக்கும் செயலே மாண்டவர் மீண்டு எழும் செயலாகும். தேகமின்றி யாரும் எவரையும் சிவ நெறிக்கு ஏற்ற இயலாது என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். எழுதாத எழுத்தே வேதமாக, ஆதியாக, ஜோதியாக, ஜீவஒளியாக, சகல உயிர் ஜீவனிலும் ஆடும் பாதமாக உள்ளது. மெய்யான பெரியோர்களின் சந்திப்பே நிஜமான பக்திக்கு வழியாகும். **இன்னில மாய்கை யாலும் இடைஞ்ஞலின் வெட்கத் தாலும் னன்னிலைக் கேற வொட்டா னழுகிக்கீ ழிழுத்துத் தள்ளும்**. ஆசான் அருளால், மனதின் பிடியிலிருந்து விடுபட்டால் ஆவி ரூபமாக உள்ள ஈசனை அடையலாம். ஆவியாக இருப்பவன் பாவியாக மாட்டான், பாவியாக இருப்பவன் ஆவியாக மாட்டான் என குருபிரான் அருளியதைத் தொடர்ந்து, பரிசுத்த ஆவி தெய்வத்தின் அருளால் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai 

**26-10-2023 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**குருபிரான் அருளமுதம்:**
சாலை ஆண்டவர்கள் அருளிய **அழியாப்பதி குடியேறிய னாயக மென் குருவின்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது. அழியாப்பதி குடியேறியவர்களே நான்மறை புகழும் அழியாததை அறிவிக்க முடியும். சிவபெருமான் தன் சொந்த மகவுகளுக்கு அருளிய வேதங்களே நான் மறைகள்.

**வான்மதிக் கொரல் வாக்கியம் எண் – 129 : வேதத்தின் தலை ரகசியம்** எமன் வந்து சந்திக்கும் தலத்தில், தான் தேடி வைத்த எந்த சம்பத்தும் மனிதனுக்கு உதவாது. எமன் பிடியிலிருந்து தப்புவித்து பரமபதத்தில் புகுத்தாட்டும் ஒருவரின் திருக்கரத்தின் உதவியை தேடாதவன் வரம்பற்ற காலம் நரக அவஸ்தையில் சிக்கித் தவிப்பான். பெரியோர்களின் 18 வகை கான்வாதாக்களில் ஒன்றே இந்த திருவாக்கியம். காய மன வாக்கினால் அடைந்த கன்மம், காய மன வாக்கினால் தான் கடக்க வேண்டும் என்பதே வேதங்களின் தீர்ப்பு. வேத வழியில் நம் வாழ்வு உள்ளதா என தெளிந்து வாழ வேண்டும்.

*ஜீவசகோதரி பானுமதி:* **திருக்குர்ஆன் - மூன்றாம் அத்தியாயம்:** ஆலு இம்ரானின் சந்ததி, யூதர்கள், கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களைப் பற்றி பேசுகிறது. நபி மூலமாக அருளப்பெற்ற வேதம், நித்திய ஜீவனை அறிந்து இறைவனடி சேர்தலை உணர்த்துகிறது. அல்லாஹுத் தஆலா தான் நாடியதை செய்து முடிப்பான் என்பதை வயதான காலத்தில் சக்கரியாவிற்கும், மலடியான அவர் மனைவி மரியத்திற்கும் பிறந்த குழந்தை மூலம் அறியலாம். ஈசா னபியின் தாய் மரியம் என்பது, பத்து வயதான கன்னி மரியத்தின் இறைசூலில் குருவருளால் ஈசா னபி மறுபிறப்பு பெற்றதாகும். இறை அச்சத்துடன் வாழ்பவர்கள் அல்லாஹ்வின் உவப்புடன், பாவ மன்னிப்பிற்காக அல்லாஹ்விடம் ஓதுபவர்களாகவும் மறுமை நாளில் சொர்க்கம் புகுந்து வெற்றி பெறுபவர்களாகவும் உள்ளனர். அல்லாஹ்வை அஞ்சிக் கொள்பவனே அற்ப அழி பொருள் நிறைந்த உலகின் இன்னல்களை சகித்துக் கொள்கிறான்.

**குருபிரான் அருளமுதம்:** சர்வ மதங்களின் வேத வேதாந்தங்கள் யாவும், மனிதன் ஒழுக்கத்துடன் வாழ்ந்து, வாக்குத் தத்தத்தின் மூலம் பிறவா நெறி பெறுவதற்கே ஆகும். திருக்குரானில் **நபியே ஓதுவீராக** என்பது உலக மக்கள் அனைவரும் பலன் பெறக் கூடிய மெய் வணக்கமாக அருளப் பெற்றுள்ளது.

**ஐம்மணிப் பொதிகை :**
**உண்டுறங்ங்கும் ஊனக்கண்கா ணாத பஞ்ஞாட்சரமே...** பொருள், பார்க்கும் கர்த்தா, பார்த்ததை அறிவிக்கும் அறிவு என 3 நிலைகள் உள்ளன. பல நாமத்துடன் விளங்கும் அறிவிருக்கும் தலமான பேரின்பத்தை அனுபவிக்கும் தேகத்தில் மனம் கலந்தால் கீழ் நோக்கமாகிறது. ஒருவன் காலத்தின் ரகசியம் அறியாத வரை எமகண்டம், ராகு காலமாகவும், அறிந்த பின் போதகமாகவும் உள்ளது. தேவ முகத்தில் பிறக்கும் போதே மணி மாடத்தில் ஏறி சாகாமை எனும் நிலை பெறலாம். பிறப்பினை ஒழிக்கும் அருளமுதத்திற்கு இறப்பில்லை. எழுதாத எழுத்தினைக் கைக் கொண்டு மோன நிலையில் நம்மை ஆக்குவது ஆசானின் நிறைமொழியே. குண்டலியே திருவடியாக, ஐயும்-கிலியும்-சவ்வும் எனும் மும்மூலமாக உள்ளது. பத்து வயதான கன்னியின் ரகசியம் அறிந்தவரே மாறாத வயதுடைய வாலகுருசாமி. எழுதாத எழுத்து நாம் தான் என உணர்த்துவதே பஞ்ஞாட்சரம். விந்து நாதத்தின் ரகசியமே கோத்தமுத்து ரத்ன வடம். பெரியோர்களின் நாதத்தால் மனித உயிர் விளைவது போல், ஜீவனில் முத்தும், உஷ்ணத்தில் ரத்தினமும் விளைகிறது. ஜீவரத்தினமே மணிமந்திர ஔஷதம். இவை யாவும் மெய் ஆசானின் ஒரு சொல்லினுள் உள்ளது. பாவ நாசமே முதலென அறியும் காலமே விடியும் காலம். காலத்தின் ரகசியம் அறிவதே ரவி பாடு சாய்வதாகும். சக்தி வடிவான உமாதேவி கீழ் நோக்கமின்றி, மேல் நோக்கமாவது குரு குலத்தோர் கையில் உள்ளது.

*ஜீவசகோதரர் வெங்கடேச முத்து:* ஆதி மார்க்க நீதி அவையின் **சரவண நந்தவனம்**, தரணியில் இல்லாத ஒரு தனிச்செயற்பதியாக, பொறிகள் ஓடாத காந்தி வீசும் இடமாக, வருங்கால சந்ததிக்கான அழியாத மெய்ப்பொருளை அருளும் ஓர் இடமாக என்றென்றும் திகழும் என்ற பகிர்வுடனும், ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai 

**27-10-2023 ~ வெள்ளிக்கிழமை ~ சிவகாசி சிறப்பு அவை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**குருபிரான் அருளமுதம்:**

சாலை ஆண்டவர்கள் அருளிய **எல்லாண்டு எல்லாண்டு எண்ணாய்கிறத் தாண்டு எவ்வேத ஆசானுமாய்** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது. **இங்கோவடி - கோ** தான் அனைவரிடமும் திருவடியாக, உணர்வாக, சொந்த இடமாக உள்ளது. மும்மலத்தை வெல்வதே எமனை வெல்வதாகும். பரம் பெரியோன் குறித்தபெரும் வாழ்வுக்கென மனுவுக்கு தனிச்சீதனமாக தந்தது ஆறாவது அறிவு. விஸ்வநாதம் கேட்டவனும், விஸ்வரூபம் பார்த்தவனுமே கண்ணும் காதும் நேர்பெற்ற அறிவுள்ளவன். இதயம் திறந்தால் தான் சொன்னவர் ஆதி எனத் தெரியும். ஆதியே ஜோதியாக, அவரவர் நாமமாக, ஏதும் இலதாய் யாதும் உளதாய், உணர்வு வடிவாக இயங்குகின்றது. அதுவே தேகம் என்னும் கூட்டை கட்டிற்று. எண் சாண் உடலுக்கு பிரதானமான சிரசினுள் தான் நாம் இருக்கிறோம். தலைகீழ் மரமான மனுவினிடம் தனித்தனியாக உள்ள தலையும் காலும் ஒன்றாக சேர்ப்பதே பிரம்மவித்தை. எழுதாத எழுத்து கொண்டே நம் தலைவிதி எழுத்தை மாற்ற முடியும்.

விநாயகர் சதுர்த்திக்கு பின் நீரில் கரைக்கும் பிள்ளையார் சிலை, கரைந்த பின் களிமண் ஆவது போல், நிஜமான விநாயகரை கரைக்க முடியாது என்பதை நிஜமான அறிவை பெற்றால் தான் தெரியும். ஞானிகள் சீடனுக்கு வழங்கும் தீக்ஷா நாமம் அவரவர் சவப்பிறப்பின் போது வைத்த தெய்வ நாமத்தை நிஜமாக்கிக் கொண்டதன் அடையாளமே. நாற்றக் கருவறையின் தீட்டுப் பிறப்பிலிருந்து, பெரியோர்களின் அருளால் பரிசுத்த மறுபிறப்பு எனும் நித்திய பிறப்பை ஒருவன் பெற்றான் என்றால், புகழுடம்பின் ரகசியமும், விஸ்வரூப தரிசனமும், மறலி கை தீண்டா வாழ்வும் பெற்றான் என்றே அர்த்தம். இதுவே வேத சாட்சியாக சரியான சரி நிலையில் ஒருவனை ஏற்றி வைக்கும் செயல்.

அடக்கம் மடக்கிப் பிடிக்க தெரிந்தவர்களே நற்றாள் எனும் கல்வி பெற்ற அனந்தர்கள். அவரவருள் ஏழ்நிலை கம்பமாய் மூவுலகும் ஊடுருவி நிற்கும் திருவடியின் முதல் பொருளான ஹயாத்தே ஐம்புலனிலும் பரந்து விரிந்துள்ள பிரம்மம். அதனை உணரச் செய்வதே மெய்வணக்கம். ஆசான் அருளால் காரணதேக ரகசியம் கைக் கொண்டவர்களே காஷாயம் அணிவதற்கு தகுதியானவர்கள். மரண குளிரை மாற்றும் கவனக் குளிகையாக விளங்குவதும் காஷாயமே.

மூலப் பிரகிருதிப் பொருளாக ஜீவதேகமும், உள்ளுணர்வாக அறிவும், அதனை அறிவிப்பது ஆறாவது அறிவாகவும் உள்ளது. பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்ம பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன் நன்னெறிப் புண்ணியமாக ஆசானிடமிருந்து பொங்கி வரும் செங்கநதியில் ஆடை நனையாது அங்கம் நனைந்து குளிக்கும் மக்களாக ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் உள்ளனர் என்ற ஆசீர்பாதத்துடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

*திருவுடைய, அதாவது ஞான ஐஸ்வரியமுடைய, பரப்பிரம்மமாக விளங்கும் குருவை னான் ஸ்மரிக்கின்றேன் திருவுடைய பரப் பிரம்மமாகிய குருவை னான் பஜிக்கின்றேன். திருவுடைய பரப்பிரம்மமாகிய குருவைத் துதிக்கின்றேன். திருவுடைய பரப்பிரம்மாகிய குருவை னான் வணங்குகின்றேன். ~* ***குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

**28-10-2023 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

பரிசுத்தஆவி தெய்வத்தின் திருவடி போற்றும் **அடங்குலொ டுங்குமி டம்படனின்ற...** எனும் பூரணப்புதையல் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* நகல் வழிபாட்டிலேயே அறியாமையில் இருந்தவனை, எந்திர வள்ளலாம் குருபிரான் தங்களின் அருளமுதத்தால் அசலான அகவழிபாட்டின் னிலை உணர்த்தி, சர்வமும் அடங்கி ஒடுங்கும் ஊமை மூலமான கலிமாப்பொருளை தன்னிலறிய வைத்து அறிவுருவாக ஆக்குகிறார்கள்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் – 149:** அமுத தாரணா வரை 64 தீக்ஷைகளுள்ளன. மாய்கை உருவானவனை மெய் வீடேற்றி, பக்தி உண்டாக்கி, மெய்யின் பால் திடசித்தமும் வேத வேதாந்தங்கள் மீது தெய்வீக இச்சை கொள்ளவும், நூலறிவால் எட்டமுடியாத தேவ ரகசியங்களை அறிய வைக்கவும் எடுத்த எடுப்பே தீக்ஷை. அறியாமையை ஒழிக்கும் மலஒழிவே தீட்சை. சற்குருபிரானின் திருவாக்கே நம் அறியாமை அகற்றி மாய்கை உருவான நம்மை மாற்றி மெய்க்கல்வியான சாகாக்கல்வியைப் பழக்கி வைக்கும் தீட்சையாக உள்ளது.

*ஜீவசகோதரர் குமார்:* **சத்தியவேதம் - மத்தேயு: 6:25** *எதை உண்போம், குடிப்போம், உடுப்போம் என கவலைப்படாதிருங்கள்.* **மத்தேயு: 16 : 26** *மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?*
ஜீவன் வந்து குடியேறியதன் அடையாளமாக மூச்சும் சப்தமும் வந்தது. ஒரு தெய்வ னாமம் சூட்டப் பெற்ற நாம், ஜீவன் உள்ள வரை சரீரம், ஜீவன் அற்றுப் போனால் சவம். ஐயறிவு ஜீவபேதங்களுக்கு மேலான விசேஷ ஆறாவது அறிவை தனிச்சீதனமாக மனு பெற்று வந்தது ஜீவன காரியமன்றி ஜீவ காரியத்திற்கே. ஜீவ ரட்சிப்புக்கென வரும் கர்த்தராகிய குருவினிடம் சரணடைந்து ஜீவரட்சிப்பைப் பெறும் போதுதான் அவனது கடமை முடிவு பெறுகிறது.

*ஜீவசகோதரர் சங்கர்:* அனித்திய சரீரத்திற்கான உணவு, உடை, தண்ணீர் என தேடிக் கவலைப்படுபவன் அஞ்ஞானி. கர்த்தரின் திருதரிசனையே ஜீவனுக்கான உடை, பரலோக மன்னாவான ஜீவஅப்பமே செவியுணவு, உற்ற குடிப்பு நீரே ஜீவத்தண்ணீர். இவற்றைத் தேடி அடைபவனே மெய்ஞ்ஞானி. மனம் அலைவற்று கவலை தீர்க்கும் அரிதுயில் கொள்வதே ஜீவவாழ்க்கையாகும்.

*ஜீவசகோதரர் கோபி:* **பரிணாம வளர்ச்சி:** உலகம் தோன்றிய காலத்திலிருந்து பஞ்சபூதங்களின் செயலில் எவ்வித மாற்றமும் இல்லை. இறைவனின் பேரறிவுப் பெட்டகமான பஞ்சபூதக் கலப்பிலிருந்தே அனைத்து படைப்புகளும் உண்டாகின. மனிதனின் மனவளர்ச்சியால் உண்டான பொருட்கள் ஆக்கத்தை விட அழிவையே தருகின்றன. எல்லாமாய் அல்லதுமான திருச்சிற்றம்பலப் பொருளாக உள்ள ஜீவனாகிய அறிவுக்கு அழிவும் ஆக்கமும் இல்லை.

*ஜீவசகோதரர் சங்கர்:* இறைவனின் கை ஆயுதமான பஞ்ஞுபூதங்கள் இன்றி உலகில் வாழ முடியாது. குருவருளால் மெய்யறிவு பெற்று மனம் அறிவாக மாறிக் கொண்ட வளர்ச்சியே பரிணாம வளர்ச்சியாகும்.

**ஐம்மணிப் பொதிகை:** குருபிரானின் னாத பஞ்ஞாட்சரமே, நம் ஜீவாதார ஆட்டத்தை சமரசமாக்கி வாழ்நாள் வீணாகாமல் காத்து சாலோக ரூபனிலையான சன்மார்க்க செயலில் புகுத்தாட்டுகிறது. குருமுனியான குரவர் கொடுக்கும் **கு** எனும் இருள் மரிக்கும் குமரி கற்பத்தை செவி வாயிலாக உண்டால் குண்டலியாம் திருவடி சேர்ந்து பிறவாமை பெறலாம். வரமாகிய அமானிதத்தை தனிச்சீதனமாகப் பெற்று வந்த மனுவே குருவருளால் உள் ஞானக்கண் திறக்கப் பெற்று, சமரசம் சமத்துவம் சமாதானம் இருக்கும் உயிரொட்டிய ரகசிய னிலையை அறிகிறான் என்ற பகிர்வுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் ஆண்டவர்கள் திருவடி போற்றி அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai

**29-10-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி அவை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்**

*ஜீவசகோதரர் கௌதம்:* பொய்யை மெய்யென நம்பி காலத்தை வீணாக்கிக் கொண்டிருந்த நம்மை ஏகாட்சர னாயகனாக ரூபம் தாங்கி வரும் குருபிரான் தன் னாத ஒலியான பஞ்ஞாட்சரத்தின் மூலம் பொய்யில் இருந்து மீட்கிறார்கள். இதனை சாலை ஆண்டவர்கள் **மாத வன்றவ மருந்நொன் றிருக்கு வாங்ங வாருமே மரண வறுமை தீருமே...** என அருளியுள்ளார்கள். ஆசானின் மனோ நோக்கிற்கு இணங்கி நம் மன வழி செல்லாது அறிவுடன் நடக்கையில் பரமாத்ம நிலை அறிந்து, ஏகாட்சர னிலையை நாமும் அடையலாம். பொய்யுலக வாழ்வை விட்டு மெய்யறிவு உதயம் காட்டி வீடுபதம் அடைய வைக்கும் மெய்க் கல்வியில் நம்மை பழக்குபவர்களே ஆசான். ஆசான் அருளால் பிரம்மத்தை அவரவரும் தன்னில் அறியும் பொழுதே காலமற்ற இறைவனை அறிந்து அம் மயமாகலாம். சகல பாஷைகளும் மௌனத்தில் இருந்தே உருவாகின. எல்லா பாஷைகளுக்கும் நடுவாக விளங்குவதே ஏகாட்சரம். ஆசான் திருக்கலிமா மையாகிய தங்களின் னாதத்தை நம் புருவ மத்தியில் தீட்டி வினையாகிய எம கண்டத்திலிருந்து மீட்கிறார்கள்.

*ஜீவசகோதரர் சங்கர்:* ஐம்பத்தியொரு அட்சரம், சொல் மூன்று அட்சரமாக, ஏகாட்சரமாக, வேதத்தின் சிகரமாக, புள்ளியதே கூராக இருப்பதாக ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். எமனிடமிருந்து நம்மை காக்கும் ஆசானின் னாதத்தை அருளும் னாவுக்கு பெரிதாக உலகம் இல்லை என தற்கலை பீர்முகமது ஒலியுல்லா அவர்களும் அருளியுள்ளார்கள். ஆசான் தங்களின் பெருங்கருணையால் நம்மை எழுவகை தோற்றத்திலிருந்து, தோற்றமில்லாமை எனும் ஈஸ்வர ரூபத்தில் ஆக்குகிறார்கள். முருகப் பெருமான் தங்களின் சுப்பிரமணியர் யோக ஞானத்தில், மும்மூலம் கொண்டதாலே முருகன் எனவும், கருவிகளை கொன்றதாலே கார்த்திகேயன் எனவும், வாசியை மலராய் சூடி சூரசம்ஹாரம் செய்ததினாலே சுப்பிரமணி எனவும், அரு நரகத்தினை அறுத்ததாலே ஆறுமுகன் எனவும் அருளியுள்ளார்கள். இவ்வாறான செயல்களை ஒரு சற்குரு பெருமான் நேரில் காட்ட, அதை கண்டு, கேட்டு, உணர்ந்தால் சிவயோகம், சிவபோகம், சிவானந்தம், சிவானுபவம், சிவஞானம் இவை அனைத்தும் கை வரவாகும் என்பது மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களின் திருவாக்கு. அவரவர் உள்ளத்தை அதிக தெளிவு படுத்திக் காட்டும் தெய்வக் கண்ணாடியான கூரான குருவருளைக் கூர்ந்து போற்றி மனதை வெறுத்து நின்றால் வேதாந்தத்தை வெல்லலாம் என்ற பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவாக்குடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

**29-10-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்**

பரிசுத்த ஆவித் தெய்வம் பரம்பொருள் பிரம்மப்பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் ராஜமகேஷ்:* ஜீவ பண்டிதர்கள் அருளும் செவியுணவு ஜீவனுக்கு யோக உணவும், தேஜசும் தந்து ஜீவனில் உள்ள சர்வ மாசுகளையும் நீக்குகிறது. இதனையே **நல்ல மருந்து இம்மருந்து சுகம் நல்கும் வைத்திய நாதமருந்து** என வள்ளலார் அருளியுள்ளார். **மாத வன்றவ மருந்நொன் றிருக்கு வாங்ங வாருமே மரண வறுமை தீருமே** என சாலை ஆண்டவர்களும் அருளியுள்ளார்கள். ஆசான் அருளால் மறுபிறப்பு பெற்றவன் அடுத்தடுத்து செவியுணவு பெறவில்லை எனில் வாயுணவற்ற தூலம் சாவுதல் போல, செவியுணவற்ற புகழுடம்பு பொய் உடம்பாகும். ஆகவே பிறவிப் பிணி தீர்க்கும் செவி உணவு இல்லாத போதே சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என திருவள்ளுவர் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் கிரகதுரை:* சமத்துவம், சமாதானம் என்பது ஜீவனை அறிந்தவர்க்கே சாத்தியம். புலன்கள் வழியாக வாழ்நாள் செலவாகாமல், ஆதி மார்க்க னாத னீதி மூலம் மனதை அகமுகமாக திருப்பி பிரம்மம் ஆக்குவதே செயலுடைச் சமரசம். கசப்பு தீட்டு பிண நாற்றம்



Copyright © AMNA Trust, Chennai  

வெளியாகி யுகங்கோடிகால னரக வேதனைக்குப் போகாமல், மெய்க்கல்வி மூலம் நம்மை மாமிச இச்சை தரும் மரணத்திலிருந்து விலக்கி பஞ்ஞாட்சரமாக ஆக்குபவர்களே சமரச வேத னாதர். அவர்களின் னாதமே உயிரின் ரகசியத்தை அருளும் வேதமாக உள்ளது.

*ஜீவசகோதரர் பழனிகுமார்:* காலத்தினுள்தான் ஜோதிடத்தில் கூறப்படும் அத்தனை நிலைகளும் உள்ளன. நம் ஜீவன் மனமாக மாறி அலையும் போது வாழ்நாள் நஷ்டம் அடைகிறது. குருவின் னாத விளக்கே, அறியாமை இருளில் இருக்கும் நம்மை மீட்கிறது. காலச் சக்கரமாக விளங்கும் சந்திர சூரியர்கள் மற்றும் காலக் கிரகங்களின் பிடியில் சிக்கியிருக்கும் நம்மை, குருவானவர் மீட்டு காலம் கடந்த கங்குல் பகலற்ற இடத்தில் குடியேற்றி வைக்கிறார்கள். பெரியோர்களின் வாய்மைக்குள் ஆனவர்களே தன்னை அறியும் தவமுறையைக் கைக்கொண்டு பேரின்ப பெருவாழ்வு வாழ்கிறார்கள்.

*ஜீவசகோதரர் ராஜேஷ்:* தோற்றத்தில் உள்ளதும் அழிவிற்குரிய பொருள்கள் யாவும் கடந்து, அறிவே அழியாத கோடி சூரியப்பிரகாச பரிசுத்தப் பொருளாக உள்ளது. அதனை அறிய விடாமல் தடுப்பது மாயை. **தன்னை அறியும் அறிவை அறிந்தபின் தன்னையே அர்சிக்கத் தானிருந்தானே** என்கிறது திருமந்திரம். அறிவை ஒளிரச் செய்யும் ஆசானின் சிவச்செங்கோல் கொண்டு நம் விதியை மதியாய் மாற்றி, மனம் அலைவற்று அறிவு வடிவினன் ஆகுவதே மனிதனின் முதல் கடமை. தன்னை அறியும் தனி அறிவே மனிதனுக்கு கொடுக்கப்பட்டுள்ள முதல் சீதனம் அதுவே சிவமயமாக நாதமாக திருச்சிற்றம்பலப் பொருளாக உள்ளது.

*ஜீவசகோதரர் கணேஷ்வரன்:* தாயின் கருவறையில் பிறந்த நாம் னரனாக உள்ளோம். ஒரு மெய் ஆசானின் இரக்கத்தால் செவிச் செல்வம் பெற்று மனிதனாய் மறுபிறப்பு எடுக்கின்றோம். பிறவிப்பிணி மாற்றி, அழிவில்லா பேரின்ப வாழ்வு பெறும் செயல் கொண்டு விளங்குவதே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் சங்கர்:* ஜீவகுருவினிடம் சீர் குளிர் காய்வதே நம் பாவங்களை தீர்ப்பதற்கான ஒரே வழியாகும். குருவருளால் மனம் அலைவற்று நம் அகங்காரம் அறிவாகும் போதே மெய்உணர்வு பெற்று பிரணவத்தில் இருந்து நம்மை உயிர்ப்பிக்கும் பிராணனாகிய னடுப் பொருளை அறிய ஏதுவாகும். பிறவிச் சுழலில் சிக்காமல் நம்மை மீட்கும் செயலே குரு பார்க்க கோடி நன்மை என்பதாகும். குருவருளால் சா முன் சாகப் பழகியவனே ஜென்மசாபல்யம் பெற்ற ஜாதி மனுக்குலம் என்ற பகிர்வுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

## இசை வகுப்புகள்
## தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

### 01-10-2023 ~ ஞாயிற்றுக்கிழமை

சாலை ஆண்டவர்கள் அருளிய **விடிந்நன னல்ல னாளும் மெய்வழிச் சாலை னாட்டில்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**திங்களூர் தனி லங்nெ்ன்ற ணிகையர்**
**சீதன மெங்nேயென் றோதிட - அந்நச்**
**சேதிபு தியதென் றாவிட - இருந்**
**நிருவின் மொழியறி யாது குழறலும்**
**வருகும் கிருபையென் மீது பெருகலும்**

என்ற **சேவடிச் சேகரம்** பாடல் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai

**22-10-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

சாலை ஆண்டவர்கள் அருளிய **அங்ஙம திடத்தி லைம்புலக் கதவை...** என்ற குருமணிமாலை பாடலுடன் அவை மலர்ந்தது.

**அண்ணல்சீ தன மின்னதின் னதென்றெ**
**டுத்தெடுத் தேவுப தேசம் - பின்ன**
**டுத்தடுத் தேசாட் சிவேதம் - ஈண்டு**
**மாண்ட பிறவியின் னீண்ட கருங்கடல்**
**தாண்டி யக்கரை யாண்ட னாயகா**

என்ற **சேவடிச் சேகரம்** பாடல் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை நிறைவுற்றது.

**29-10-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

சாலை ஆண்டவர்கள் அருளிய **உய்ய வேயெனக் கும்முல குய்யவே...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**பண்டைனான் மறை பேசும்ப ரிசையன்**
**அண்டர்ப திக்கெனை யேற்றியே - முன்னாள்**
**கொண்டக ளைப்பெலா மாற்றியே - ஜெயப்**
**பழுதி லாதுதனித் தொளிரு னாதவுடல்**
**அழிவி லாதபதி யோகர் யோகியென**

என்ற **சேவடிச் சேகரம்** பாடல் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை நிறைவுற்றது.

**குரு வா ஆழ்க ! குருவே துணை !!**

*பிரம்மானந்நமும், பரம சுகத்தைத் தருவதும், கேவலமும், ஞான வடிவினதும், துவந்துவாதீதமும், ஆகாயத்தைப்போன்று அளவிடற்கரியதும், தத்துவமஸி முதலியவற்றின் இலக்ஷியமும், ஏகமும், னித்தியமும், விமலமும், அசலமும், சகல புத்திகளின் சாக்ஷி வடிவமும், பாவாதீதமும், முக்குணங்ங ளின்றியதும், சற்குருவுமாகிய அவரை னமஸ்கரிக்கின்றேன்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

## ஆதி மார்க்க னீதி அவையின் 2023 – அக்டோபர் மாத னிகழ்வுகள்

**06-10-2023: வெள்ளிக்கிழமை** குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் அவதார திருனாள் சென்னையில் சிறப்பாக கொண்டாடப் பெற்றது. அனைவருக்கும் இரவு விருந்து வழங்கப்பெற்றது.













**18-10-2023: புதன்கிழமை** ஜீவதம்பதியர் மஞ்சுநாதன்- மணிமொழி அவர்களின் புதல்வி தீபீகா மணமகன் புவனேஷ் இவர்களின் திருமணம் பெங்களூரில் குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் திருமுன்பாக சிறப்பாக நடைபெற்றது.






Copyright © AMNA Trust, Chennai

**27-10-2023: வெள்ளிக்கிழமை** சிவகாசியில் நமது குருபிரான் சாலை ரவி அப்பா எழுந்தருளி ஞான தேட்டமுடைய மக்களை சந்தித்து அருளமுத வர்ஷிப்பை வழங்கினார்கள்.





**அக்டோபர் மாதம்: சரவண நந்தவனத்தில்** இருக்கும் கிணறு தூர்வாரி சீர் செய்யப்பெற்றது.





Copyright © AMNA Trust, Chennai 

## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்


| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **24-12-2023 / சென்னை** | ஜீவசகோதரர் சரவணகுமரன் அவர்கள் ஜீவப் பிரயாணமான முதலாம் ஆண்டு பூர்த்தி சென்னையில் குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் திருமுன்பாக சிறப்பாக நடைபெற உள்ளது. |
| **31-12-2023 / சென்னை** | ஆதி மார்க்க னீதி அவையின் புத்தாண்டு சிறப்பு சபை |



Copyright © AMNA Trust, Chennai

## உற்றெழுத்து உணர்த்தல் – 4

உற்றெழுத்து உணர்ந்த மக்கள் அதனை வரும் **டிசம்பர் 10**ம் தேதிக்குள் write2amnatrust@gmail.com முகவரிக்கு, அல்லது Whatsapp எண் +917305972399 அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம். சரியான உற்றெழுத்தை அனுப்பிய முதல் 10 அன்பர்களின் பெயர்கள் புரந்தரர் பொன்னேடாக மின்னி வரும் மின்னணு சஞ்ஞிகையில் மின்னுவது திண்ணம்.




**இடமிருந்து வலம்:**

1) உணர்ந்த பின் ஓதுவது (5)
7) இதை விரித்தேன் என்றார் வள்ளலார் (2)
8) மந்திரம் (2)
10) சாகாத்தலை கலைந்துள்ளது (4)
13) இது கொண்டு எழுதாத எழுத்து (3)
14) அபத்தமில்லாதது (5)
23) இது மலிந்தது பவக்காடு (7)
24) ஞான நிலை இதனால் பிடுங்குபடும் (2)

**வலமிருந்து இடம்:**

6) ஹூவை அறியாதவர்க்கு இது பாழ் (4)
9) சைவத் திருமேனி சுருதிக்குரியவர் (4)
12) இங்கு எழுதாத பஞ்சாட்சரம் கலைந்துள்ளது (5)
16) கோள்களில் ஒன்று (3)
17) உயிருக்கு ஆனி (2)
19) ஓதினேன் என்றவரும் இதனை அறியார் (3)
21) இமையா நாட்டம் தருவது (6)



Copyright © AMNA Trust, Chennai

**மேலிருந்து கீழ்:**

1) குடதிசை (4)
2) வாசனை கலைந்துள்ளது (4)
3) உஜூது (2)
4) பூக்கும் - வேறு சொல் (4)
5) சாலையின் பெயர் (6)
6) தமிழ் மாதத்தில் ஒன்று (4)
11) தனிகையர் இப்படியான கிழ வடிவினர் (3)
18) இதுவே துறையின் குருமுறாதி கலைக்ஞானம் (2)
21) காருண்ய வடிவு (3)
22) எழுவகை தோற்றத்தில் ஒன்று (2)

**கீழிருந்து மேல்:**

15) அனைவரும் செய்யும் வழிபாடு (2)
17) இதை கைவிடக்கூடாது என்றார் ஔவையார் (4)
20) யுகாந்த நாட்டு செல்வம் கலைந்துள்ளது (3)
23) சங்கு கொண்டு ஆண்டவர்கள் செய்யச் சொன்னது (3)

குறிப்பு: உற்றெழுத்து அனுப்பும் வழிமுறை: கட்டம் வரைந்து அனுப்பாமல், "இடமிருந்து வலம்.... கீழிருந்து மேல்" என்ற தலைப்புடன் அதற்குரிய எண்ணும் பதிலுமே போதுமானது.

## அக்டோபர் மாதம் 2023 வெளியான உற்றெழுத்து உணர்த்தல் – 3: விடை

**இடமிருந்து வலம்:**

1) அமானிதம் 3) எண்ணமே 5) பாசாங்கு (பாங்சாகு) 12) மேருறை (ருமேறை) 13) நடு 14) நாட 15) சுவை 16) தர்மி 18) நிலம் 20) மாறுபடா 22) பார் 23) இசாரா 25) மாண்ட 27) ஆனி

**வலமிருந்து இடம்:**

4) பரணி 8) கம் 11) நடுக்கரு 19) கொண்டல் 26) ஓதி 28) சாமம்

**மேலிருந்து கீழ்:**

1) அந்தம் 2) தரங்நுறைந்நிடா 7) குருபாதம் 8) கருவை 9) கதிர் 15) சும்மா இரு 17) மிடர் 21) பரா 25) மானி

**கீழிருந்து மேல்:**

5) பாணினி 6) சாபம் 10) அக்கண் (க்அகண்) 14) நாடு 24) சாறு 27) ஓசை கொண்ட நடனமே 28) சாதி



Copyright © AMNA Trust, Chennai 

**2023 அக்டோபர் மாதம், AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை அளித்தவர்கள்**

ஆலென்
மாதவன்
ஸ்ரீமா
மகிமா
சபிதா
கிருத்திகா
வடிவேலன்
தனராஜன்
ஜெயப் பிரகாஷ்
பழனிவேல்
புன்னகை
செல்லம்மா
பாஸ்கர்
சரஸ்வதி சேகர்
கிரகதுரை
சந்துரு கவி
உமாராணி
பானுமதி மகேஷ்



சுந்தர்
மஞ்சுநாதன்
நாகலிங்கம்
லதா உதயசூரியன்
முருகன்
ராஜமகேஷ்
கணேஷ் கிருஷ்ணன்
அஜய் கிருஷ்ணன்
பொன்லக்ஷ்மி
மோகன் சித்ரா
ரியாஸ்
பாலமுருகன்
தியாகராஜன்
ராமன். காஞ்சிபுரம்
சசி. மிட்டபள்ளி
கார்த்திகேயன். ஆவடி
மகேஷ். மதுரை
ராஜேந்திரன். சென்னை

AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்ங ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

Account Name: **Aathi Margha Neethi Avai**
Account Number: **50200047470073**
IFSC: **HDFC0000323**
Branch: **Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்சிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 28 – Month: November 2023*